பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

88 A/L
Paper Classes
(Sat Sun)
Physics - திரு வர்ணம்
Chemistry- திரு. தில்லை
Botany - திரு குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
NEW MASTER INSTITUTE,
241, NAVALAR ROAD,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

88 A/L
Paper Classes
(Sat Sun)
9. 30 - Botany
10. 30 - Zoology
11. 30 - Chemistry
12. 30 - Physics
NEW MASTER INSTITUTE
241, NAVALAR ROAD
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு சித்திரை மீ 01 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 25 (13 04 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 53

# ஐ.நா.குழுவின் நேரடி மேற்பார்வையில் புனர்நிர்மாணவேலைகள்

## வடக்கின் 5 மாவட்டங்களிலும் நடக்கும் என்று அதிகாரி தகவல்

— அலுவலகச் செய்தியாளர்கள்: சண்.ஜோண்சன், சுரேஷ்குமார் —

யாழ்ப்பாணம் ஏப்பிரல் 13

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும், புனர் நிர்மாண வேலைகளை, ஐக்கிய நாடுகள் சபை தனது நேரடி மேற்பார்வையில் செயற்படுத்திவிக்கும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், ஆகிய சம்பந்தப்பட்ட ஐந்து மாவட்டங்களிலும், புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்படும்.

அகதிகள் புனர்வாழ்வுப் பணியும், புனர்நிர்மாணப்பணியும், சமகாலத்தில் மேற்கொள்ளப்படும், அவை மிக விரைவில் ஆரம்பிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகர் குழுவின் திட்ட அலுவலர் திரு. லாமின்ற் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து தமிழகத்திற்கு கடந்த வாரம் அகதிகள் யாழ்ப்பாணம் வந்ததைத் தொடர்ந்து. ஐ நா. அகதிகள் புனர்வாழ்வுக் குழு ஒன்று இங்கு வந்திருப்பது தெரிந்ததே. இந்தக் குழுவில் இலங்கையர் ஒருவர் உட்பட ஐவர் அங்கம் வகிக்கின்றனர்,

பிரஸ்தாப குழு தனது புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகள் முடியும் வரை இங்கு வதிவிட அலுவலகம் ஒன்றை அமைத்துத் தனது திட்டங்களை அமுல் நடத்தும்

குழுவின் திட்ட அலுவலர் திரு. லாமின்ற் குழுவின் புனர்வாழ்வு. புனர்நிர்மாணத் திட்டங்களை உதயன் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

அவர் தெரிவித்ததாவது;-

நாட்டு நிலையை அவதானித்த பின்னர், புனர்நிர்மாண புனர்வாழ்வு வேலைகளை உடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஐ. நா வின் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகள் குறித்துபொதுமக்கள் எதுவித ஐயமும் கொள்ளத் தேவையில்லை

இந்தத் தொகையின் ஒரு பகுதி நீர் வழங்கல் வீதிகள் புனரமைப்பு, சுகாதார சேவை, கல்வி. விவசாய அபிவிருத்தி என்பனவற்றுக்குச் செலவு செய்யப்படும்.

நீர் வழங்கல் வடிகாலமைப்புக்கு 60 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் சுகாதார சேவைகளுக்கு 1 கோடியே 86 லட்சம் ரூபாவும், வீதிப்புனர் நிர்மாணத்துக்கு 3 கோடியே 48 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், கல்வி அபிவிருத்திக்கு 1 கோடியே 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும். விவசாய அபிவிருத்திக்கு 1 கோடியே 91 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது

இந்தத்தொகைகளானது வடபகுதிக்கான நிதியுதவியான 35 கோடியே 55 ஆயிரம் ரூபாவிலேயே உள்ளடக்கப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வடபகுதியின் 5மாவட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



இண்டைக்கு வருஷம் பிறக்குது, ஆண்டு முழுவதும் நல்ல நாட்களாய் இருக்க வழிசெய் இறைவா!

### சுபநேரம்

13 - 04 - 1988
சித்திரை 01
புதன்கிழமை
சுபநேரம்:
4 35 முதல் 6.05 வரை
ராகுகாலம்:
12.05 முதல் 1.35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
புது வருடப்பிறப்பு

## சமாதானம், ஒற்றுமையை நாட்டில் கொண்டுவரட்டும்

### நகர கொமாண்டன்ட் வாழ்த்து

பிறக்கும் புத்தாண்டு நாட்டில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் கொண்டு வரும் என்றும் நல்லுறவுக் காற்று நாட்டில் வீசும் என்றும் நம்புகிறோம்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இந்திய அமைதிப்படையின் நகர கொமாண்டன்ட் பிரிகேடியர் கார்லோன் விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிறக்கும் புத்தாண்டு யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான சுபீட்சம் நிறைந்த புத்தாண்டாக இருக்கவேண்டும் என்று நானும் எனது சகாக்களும் வாழ்த்துகின்றோம் என்றும் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

### புத்தாண்டுக் கருமம்

**ஆண்டு: விபவ**

பிறக்கும் நேரம்:
நண்பகல் மணி 12 - 45
விஷு புண்ணிய காலம்:
இன்று காலை 8 - 45 மணி முதல் பிற்பகல் 4 - 45 மணி வரை
அணிய வேண்டியது:
பச்சை நிறப்பட்டு அல்லது பச்சைக் கரையமைந்த ஆடை
கைவிசேஷம்:
இன்று பிற்பகல் 2 - 22 மணி முதல் 4 - 10 மணி வரை.
அல்லது
இன்று பிற்பகல் 3 - 16 மணி முதல் 4 - 04 மணி வரை
அல்லது
நாளை வியாழன் காலை 8 - 20 மணி முதல் 9 - 38 மணி வரை
அல்லது
நாளை வியாழன் இரவு 8 - 28 மணி முதல் 9 - 16 மணி வரை
நாள் வேலை ஆரம்பம்:
இன்று புதன் பிற்பகல் 2 - 30 மணி முதல் 4 - 00 மணி வரை
அல்லது
நாளை வியாழன் காலை 9 - 00 மணி முதல் 9 - 30 மணி வரை

## இந்திய அரசு-புலிகள் தொடர்பு குறித்து அமைச்சர் நட்வர்சிங்

மஸ்கட், ஏப். 12

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே தொடர்பு இருந்து வருகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஓமான் தலைநகர் மஸ்கட்டில் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து சமாதான ஒப்பந்தத்தை ஏற்பார்கள் என்று இன்னும் இந்தியா நம்புகிறது.

அவர்கள் மாகாண சபைத் தேர்தல்களில் கலந்து கொள்வார்கள் என்றும் இந்தியா இன்னமும் நம்புகின்றது

அமைதிப் பணி முடிந்து ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் ஒரு நாள் கூட அமைதிப் படை இலங்கையில் தங்காது. அமைதிப் படை இலங்கையை விட்டு வெளியேறுவதற்குக் காலக்கெடு எதுவும் இடையாது.

ஒப்பந்தத்தில் காலக்கெடு பற்றி கூறப்படவில்லை.

இப்படி திரு நட்வர்சிங் தெரிவித்தார் (இ-எ)



ஆறுமலரும் விபவ ஆண்டு துன்பங்களைப் போக்கி இன்பம் தரவும், வளம் பெருக்கி நலம் பொலிவவும், அன்பும், பண்பும், சமாதானமும், சாந்தியும், அமைதியும், அறமும் நீதியும் நிலைத்திடவும் வழி செய்திட வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றனர் இக்குடும்பத்தினர்.

நன்னாளான இச்சித்திரைப் புத்தாண்டில் தமிழர் இல்லந்தோறும் இந்தக் காட்சியைக் காணலாம். (அ)

(படம் சண்: ஜோண்சன்)

## இராமேஸ்வரத்தில் விமானத் தளம்

மண்டபம், ஏப். 12

பெரிய போக்குவரவத்து ஹெலிக்கொப்டர்கள் தரை இறங்கக்கூடிய விமானத்தளம் ஒன்று இராமேஸ்வரத்துக்கு அருகில் அமைக்கப்பட உள்ளது.

இதற்காக 10 ஏக்கர் காணியை இராமேஸ்வரத்தில் இருந்து 4கிலோ மீற்றர் தூரத்தில் இந்திய அரசு சுவீகரித்துள்ளது

இந்தியக் கரையோர பாதுகாப்புப் படை அதிகாரி பாலகிருஷ்ணன் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

### பொதுத் தேர்தல் அறிவிப்பு

## திகைக்க வைக்கும் என்கிறார் அத்துலத்

கொழும்பு, ஏப். 13

எதிர்க் கட்சிகள் திகைக்கக்கூடிய வகையில் அரசு பொதுத்தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும்.

அமைச்சர் அத்துலத் முதலி இத்தகவலை வெளியிட்டார்.

கொழும்பில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

பொதுத் தேர்தல் தான் நடைபெறும். சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட மாட்டாது.

நாடாளுமன்ற ஆயுளை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசைத் தோற்கடிக்கலாம்.

பொதுத் தேர்தலில் அந்த நிலை வராது. எதிர்க் கட்சிகள் தங்களுக்குள் போட்டியிட்டு ஆளும் கட்சிக்கு வெற்றி வாய்ப்பைத் தருவார்கள்.

இப்படி அமைச்சர் சொன்னார். (இ-எ)

### 3 அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ் பிராந்திய சுகாதார திணைக்களத்துக்கு 3 புதிய அம்புலன்ஸ்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட உள்ளன

இதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகிறது. (இ 10)

### வாசகர் கவனத்திற்கு...

சித்திரைப் புத்தாண்டையொட்டி உதயன் நிறுவனப் பணியாளர்களுக்கு இன்று விடுமுறையாகும்.

அதன்காரணமாக நாளை வியாழக்கிழமை [14-4-1988] மட்டும் உதயனை வாசகர்கள் படிக்க இயலாது

வெள்ளிக்கிழமை [15 4-1988] உதயன் வழமைபோல் வெளிவருவான்.

### காஷ்மீரில் இலங்கை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஸ்ரீநகர், ஏப் 12

காஷ்மீர மாநிலத்தில் நேற்று முஸ்லிம்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் ஒன்றில் இலங்கை அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இலங்கைப் பிரதமர் பிரேமதாசா நேற்று ஸ்ரீநகருக்கு விஜயம் செய்வதாக இருந்தது. (இ-எ,

## அடுத்த குழுவினர் 15ஆம் 16ஆம் திகதிகளில் காங்கேசன் வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப் 13

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளில் அடுத்த குழுவினர் எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதிகளில் காங்கேசன்துறையை வந்து சேர உள்ளனர்.

அந்த இரு தினங்களிலும் 1000 குடும்பங்கள் அகதிகள் அதே "ராமானுஜம்" கப்பல் மூலமாகவே அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

இதுவரையில் மூன்று முறையில் 467 குடும்பங்களைச் சேர்ந்த 1507 பேர் காங்கேசன் துறையை வந்தடைந்துள்ளனர்.

(இ - க - 9)

## அனுமதி பெறாத கடைகளில் இறைச்சி வாங்காதீர்!

### ஆணையாளர் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.13

அனுமதி பெறாத இயங்கும் கடைகளில் இறைச்சியை வாங்கி உண்ணாதீர்கள்.

இதனை உண்பதனால் வாந்திபேதி; நெருப்புக் காய்ச்சல் செங்கண்மாரி போன்ற தொற்று நோய்கள் ஏற்பட ஏதுவாகின்றது.

இவ்வாறு யாழ் மாநகர ஆணையாளர் சிவஞானம் விடுத்துள்ள பத்திரிகைக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி பல அங்கீகாரமற்ற இறைச்சிக் கடைகள், மீன்கடைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

இக் கடைகளில் விற்கப்படும் ஆடு, எருமை இறைச்சி சுகாதாரப் பரிசோதனையின்றியும் அங்கீகாரமின்றியும் விற்கப்படுகின்றது

இவற்றை மக்கள் வாங்கி உண்பதனால் வாந்திபேதி நெருப்புக்காய்ச்சல், செங்கண்மாரி போன்ற தொற்று நோய்கள் உண்டாகவும் ஏதுவாக உள்ளது

ஆகையால் இப்படிப்பட்ட இறைச்சிக்கடைகளில் இறைச்சி வாங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

இப்படி அறிக்கையில் மேலும் கோரப்பட்டுள்ளது (இ-ஒ-க)

### புதுவருட வாழ்த்துக்கள்

வாசகர்கள் விளம்பரதாரர்கள் விநியோகஸ்தர்கள், மற்றும் அபிமானிகள் அன்பர்கள் அனைவருக்கும் 'உதயன்' தனது இதயம் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறான்.

## திங்களன்று வந்த கப்பலில் 508 பேர்

கடந்த திங்கட்கிழமை தமிழகத்திலிருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை வந்தடைந்த கப்பலில் 184 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேர் இருந்தனர்.

இந்த அகதிகள் சாவகச்சேரி, கிளிநொச்சி, பருத்தித்துறை, மாவிட்டபுரம், மயிலிட்டி, மாதகல் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்

அகதிகள் வருகை, பராமரிப்பு ஆகியவற்றை நேரில் பார்ப்பதற்காக சுவிஸ் தூதரக அதிகாரி ஒருவரும் வந்திருந்தார், [இ 68]

எங்கும் மங்களம் பொங்குக!
இன்பம் என்றென்றும் தங்குக!!

நிதி என்பது வாழ்க்கையின் பெருவளம்.

அதனை மென்மேலும் பெருக்கிட நம்பிக்கையான ஓர் இடத்தில் முதலிடுவதும், சேமிப்பதும் அவசியம்.

நம்பிக்கை, நாணயத்தின் சின்னமாக விளங்கும் ஷப்ரு நிதி நிறுவனத்தில் முதலிடுங்கள்

வாடிக்கையாளர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

எமது நெஞ்சம் நிறைந்த புது வருட வாழ்த்துக்கள்.

ஷப்ரு நிதி நிறுவனம்
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4,
தொலைபேசி: 589310, 590576
யாழ். முகவர்:
207. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ ஒன்னஞ் சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

புறொய்லர் குஞ்சுகள் (BROILER CHICKS) பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குண ராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (2472)

உசன் சந்தைக்கு அருகில் இறைமாவடி வளவு 11 பரப்பு தென்னங் காணி இறையக்கட்டுக் காடு 13½ பரப்புத் தென்னங்காணி இறையக்கட்டுக்காடு வீட்டுடன்கூடிய 8 பரப்புக் காணி ஆகிய மூன்று காணிகள் விற்பனைக்கு உண்டு தனித் தனி உறுதிகள் உண்டு. விபரங்களுக்கு: நாதன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை, (2302)

வரகுஅரிசி, உழுத்தம் மா, குரக்கன் மா சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கலாம். ஸ்ரீ கிருஷ்ணா மில், 622, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 2790

### தேவை

சகலவிதமான TV றேடியோ டெக் சாதனங்கள் திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை VENUS RECO-RDING and Radio Watch Works 226/1 Stanley. RoadJaffna. 2473]

மூன்று மைல் சுற்றுடலில் வீடு ஒன்று உடன் தேவை விபரங்களுக்கு மலியன் கூல் பார் இலக்கம் 25, யாழ்ப்பாணம். [2513]

தொழில் நிறுவனம் ஒன்றிற்கு ரைப்பிங் (ஆங்கில) அல்லது ரைப்பிங் உடன் கிளாக் வேலையும்செய்யக்கூடிய குமாஸ்தா ஒருவர் தேவைப்படுகின்றது தகுதிவாய்ந்தவர் உடன் விண்ணப்பிக்கவும் சம்பளம் தகுதி அடிப்படையில் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து பத்துமைல் சுற்றுடலில் வேலை செய்யக்கூடியவராக இருக்கவேண்டும். விளம்பர இல 107 உதயன், யாழ்ப்பாணம், 2792

### விவாகப்பொருத்துனர்

நான் தரகரில்லை பட்டதாரிகளினதும், வெளிநாட்டு, உள்நாட்டு உத்தியோகங்களிலும், பெண்களினதும் சாதகங்கள் உண்டு. விபரங்களுக்கு சாதகங்களுடனும் படத்துடனும் நேரில் வரவும் தபால் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது காலை 7.00—9-30மணி, மாலை 2 00—5-00 மணி வரை. விலாசம்: ஸ்ரீகாந், பலாலி வீதி, திருநெல்வேலி (திருநெல்வேலியில் வைத்திலிங்கம் மரஆலையில் இருந்து இரண்டாம் வீடு) (2516)

### சேவை

ஓமகா ஸ்தாபனத்தார் மின் உபகரணங்கள் திருத்துதல் றீவைண்டிங் செய்தல் ஆகியவற்றுடன் புத்தாண்டுமுதல் குளிர்சாதனப்பெட்டி, எயர் கொண்டிசன் திருத்தும் வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கவுள்ளார்கள். Omega, Manipay Road, Jaffna (2768)

### ரேடியோ போட்டோ ஸ்ரற்

கரமநாடுவோர் தவறுது நடுமிடம் "கிளீன் கட்" தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் தரமான ரேடியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் விரைவாகப் பெற்றுகொள்ள "கிளீன் கட்" 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்"

### காணவில்லை

நல்லூர் கந்தஸ்வாமி கோவிலில் 1-4-88 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தில் அன்று எமது முக்கியமான நகை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நிச்சயமாக சன்மானம் வழங்கப்படும் இல. 12, சங்கிலியன் வீதி, நல்லூர் (2772)

சிவகுரு இலங்கேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டையைத் (386790175V) தவறவிட்டுவிட்டேன் தயவுசெய்து கண்டு எடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பனிப்புலம், சுழிபுரம் கிழக்கு, பண்டத்தரிப்பு [519]

### பயிற்சி

Computer programming in Basic Language,- காலம் 2 மாதம், Fees 750/- மட்டும் ஆரம்பம 22-4-88 வெள்ளி 2 00 P.M மேலதிக விபரங்களுக்கு தூர்காஸ் ப்ரொஸசனாஸ், சுன்னாகம். [2347]

---

## தொழிற் பயிற்சி

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் இலகுவாக தொழில் வாய்ப்பைப் பெறுவதற்குக் குறைந்த கட்டணத்தில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன.

- ★ றேடியோ, ரெலிவிஷன் றிப்பயறிங்
- ★ Computor Programming & Data Processing (Basic)
- ★ எலெக்ரிக்கல் வயறிங்
- ★ றீவைண்டிங்
- ★ Engineering Drawing
- ★ வீடியோ டெக் றிப்பயறிங்

ஆரம்பம்: 16 4 -1988 9. 30 a.m

Jaffna Technical Institute
52/1, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

---

CHARTERED LICENTIATE
NEW SYLLABUS ...
SEPT - 88
CLASSES COMMENCING ON
23.4.88
Result Oriented Institute in North
# NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St PETERS LANE.
JAFFNA.
C/4637

---

அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
## எமது புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

★ தேனினும் இனிய அருஞ்சுவை நிறைந்தது.

**Merri Gold Toffees**

வானவில்லைப் போன்று ஏழு வர்ணங்களிலும் ஏழு சுவை ஊட்டுவதும் எங்கும் கிடைப்பதும் MERRI GOLD TOFFEES வகை வகையான தித்திக்கும்
- அன்னாசி
- ஆரஞ்சு
- லெமன்




BLACK CURRENT, PEANUT MINT STRAWBERRY
ஆகிய ஏழு சுவைகளையும் வழங்குவது
**MERRI GOLD TOFFEES**
இலங்கை தராதர சபையினால் அங்கீகரிக்கப்பட்டது
**MERRI GOLD TOFFEES**
என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
★ கைவிருப்பாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும் ★
# Present Enterprises
2546

---

வாடிக்கையாளர்கள்! நண்பர்கள்!!
அனைவருக்கும் புது வருட நல்லாசிகள் உரித்தாகுக!!

- ★ நீர் இறைக்கும் மோட்டர்
- ★ மேசை சுழல் காற்றுடி
- ★ சுழல் காற்றுடி
- ★ சூட்டடுப்பு
- ★ மேசை மின்விளக்கு

மற்றும்
சயிக்கிள் உதிரிப்பாகங்களும்
எம்மிடம் பெறலாம்.

## ஹப்பி எலெக்ரிக்கல்ஸ்
(மின் உபகரண ஏக விநியோகஸ்தர்களும் ஒப்பந்தகாரரும்)
கே. கே. எஸ். றோட், சுன்னாகம்

---



அனைவருக்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்
★
## "சங்கு மார்க்"
எவர்சில்வர் பாத்திரங்களுக்கு
★ ★
# செல்லா
## சேல்ஸ் சென்ரர்
118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக]

---

## பிரயாண ஒழுங்குகள்
சவூதி அரேபியா—வேலை வாய்ப்பு

1. பாண்போறணை உதவியாளர் [BAKE HOUSE HELPERS]

20 இடம் வயது 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் OPEN VISA. 10 நாட்களில் பிரயாணம்

2. விமானதள கிளீனேர்ஸ் [AIRPORT CLEANERS]

(PASSPORT) கடவுச்சீட்டு, கடவுச்சீட்டு முன் பக்கப் படப் பிரதி, 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் முகவர் இவ்விடம் [காங்கேசன்துறை] தற்போது தங்கி இருப்பதால் நேரில் சந்திக்கவு

T. Indranathan.

# M THREE TRAVELS
SOTHY LANE, COLLEGE ROAD,
KANKESANTHURAI.

---

வாடிக்கையாளர்கள்! நண்பர்கள்!!
அன்பர்கள்!!!
அனைவருக்கும் எமது புதுவருட
## நல்லாசிகள்

- ★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் உற்பத்தி செய்வோர்
- ★ நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்:
# முருகன்
## ஆபரண மஹால்
38, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

---

### நான்காவது ஆண்டு நினைவஞ்சலி




அன்னையின் மடியில்:
12 0 -1967
ஆண்டவன் அடியில்
13-04 1984

### க. அ. சுதீஸ்குமார்

தப்பாது ஈரிரண்டாண்டு தவறினும்
ஒப்பிலா எம் பணியே தேனே சுதீஸ்
இப்போது மெம் நெஞ்சில் நின்று
நீ சிரிக்கின்றாய்
எப்போதுமெம்முடனே நீங்காது
நிற்பாயோ?
உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா டடா, மம்மி, தம்பிமார்
அத்தான், அக்கா, மருமகன்மார், உற்றார் உறவினர்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றார்கள்.
(2484) சுதுமலை மத்தி மானிப்பாய்

---

## 185 ஆவது நாள் நினைவஞ்சலி



### திரு இளையவி பசுபதி
(முன்னாள் சமாதானநீதிவானும், இலங்கைச் சாப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும்)

தோற்றம்: 1934 - 11 - 29 ★ மறைவு: 1987 - 10 - 13

கொடிய நோயின் உபாதையில் சிக்கித் தவித்திருந்த போதும் எம்மைப் பிரியாது வெற்றி கொண்ட நீங்கள் திடீர் ஷெல் தாக்குதலுக்கு பலியானீர்களே! எங்களுக்கு நீங்கள் காட்டிய அன்பு, பாசம் இவைகளை நினைத்து எமது இதய கரங்கள் நெருப்பாய் வெந்து எரிகிறது உங்கள் நினைவு எங்களை விட்டு என்றுமே பிரியாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்
மாமி, மச்சான்மார்,
சகோதரர்கள், நண்பர்கள்.
தமோற் சந்தோர் அருகாமை,
தெல்லிப்பழை. (2777)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ் உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

# சித்திரை நிலவைப் போன்று சிரசினில் சிந்தனை வேண்டும்

தமிழர்களின் வருடம் பங்குனியில் முடிந்து சித்திரையில் தொடங்குகிறது. இவ்வழக்கத்தை இன்றுவரை ஒரு மரபாகக் கொண்டுவருகிறோம். ஆனால் மாதங்களை எண்ணத் தொடங்கும் போது தை மாதத்திலிருந்தே எண்ணத் தொடங்குகிறோம்; சீட்டுக் கணக்கு, வட்டிக்கணக்கு முதலியவற்றைப் பார்க்கும் போது தைமாதத்தையே மனத்தில் கொள்கிறோம்.

ஆயினும் வருஷத் தொடக்கம் சித்திரையாக இருக்கிறது.

தைமாதத்தையே தமிழர் வருஷத் தொடக்கமாக வைக்க வேண்டுமென்று தென் தமிழகத்திலெழுந்த தமிழறிஞர்களின் வேண்டுகோள் வெற்றி பெறவில்லை. இதற்குரியகாரணத்தை ஆராயப்புகுந்தால் குழப்பமே மிஞ்சும்.

பங்குனியில் உத்தரம் வருவதுபோல் உக்கிரமும் வருகிறது. வெயில் வெக்கையின் கொடுமை கடுமையாகப் பாதிக்கிறது. பகல் வேளையில் வெளியில் தலைகாட்ட முடியாத வெப்பம், பங்குனி வெய்யிலில் பகல் வழி போபவன் பாவி என்ற பழமொழியும் வழக்கில் உள்ளது. பங்குனியை ஒரு மங்கு மாதம் அல்லது மந்த மாதம் எனச் சொல்ல வேண்டும். உடலியக்கமும் மூளை இயக்கமும் வேகம் குறைந்த ஒரு அம்மல் மாதம் இந்தப் பங்குனி மாதம்.

இதற்குப் பின்பு பிறக்கின்ற சித்திரையோ ஆறுதலைத் தருகின்ற மாதமாக மலருகின்றது. சித்திரை நிலவுக்குத் தனிக்குளிர்மை உண்டு. சித்திராபௌர்ணமி விரதத்திற்கும் வேண்டுதலுக்குமுரிய புண்ணிய தினமாகக் கொள்ளப் படுகின்றது.

சித்திரை வருடம் பிறந்ததும் முதல் செய்யும் காரியம் நீராடலே. மருத்து நீர் தேய்த்து தலையில் கடப்பமிலையும் காலில் வேப்பமிலையும் வைத்து முழுக வேண்டுமென்பது விதியாக வந்துள்ளது இந்த விதி எந்த நாளும் காக்கப் படவேண்டிய விதியாகும். சித்திரை மருந்து நீருக்கும் சித்த வைத்தியத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சித்திரைச் சிந்தனைகளே சித்த வைத்தியச் சிந்தனைகளாகியிருக்க வேண்டும்.

ஒரு மனிதனின் எண் சாண் உடம்புக்கு தலையே பிரதானம். தலை பக்குவமாக இருப்பதோடு தலைக்குள் இருப்பதும் பதமாக குளிர்ச்சியாக இருக்கவேண்டுமென்பதாலேயே நம்மவர்கள் எண்ணெய் தண்ணீரில் கவனமாயிருந்தார்கள் மூளைக் குளிர்ச்சியே வாழ்க்கை மலர்ச்சிக்கு முதற்படி என்பதை அனுபவத்தால் கண்டுகொண்ட தமிழர்களுக்கு அவர்களுடைய முழுமுதல் தெய்வமான சிவபெருமானும் தீர்த்த மூர்த்தியாய் சாட்சி கொடுத்தான் சிவன் அபிஷேகப் பிரியனாயிருந்து எண்ணெய் தண்ணீரில் மூழ்கி அதன் முக்கியத்துவத்தை விளக்கினான். அவனுக்கு தீர்த்தன் என்ற பெயரும் உண்டு அவன் தீர்த்தமாடிய பின்பே பஞ்சகிருத்தியங்களான ஐந்தொழில்களையும் முறையாக முட்டின்றிச் செய்கிறான் இதனை "தீர்த்தன் தில்லைச் சிற்றம்பலத்தே தியாடும் கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்று கூறுகிறார் மாணிக்கவாசகர் ஒருவர் தலைக்கு எண்ணெய் தண்ணீர் விட்டு முழுகினாலேயே தங்கள் கருமங்களை முறையாகச் செய்யமுடியும் என்பது வாழ்ந்து காட்டியோர் வரலாறு.

இதனை இன்றைய நாகரிக உலகம் புறக்கணித்ததாலேயே தலைக்கிறுக்குகள், கோளாறுகள், தலைவியாதிகள் பெருகி, உலகம் தலைகீழாக உருளுவது போன்ற மயக்கத்தை உண்டாக்கி இருக்கிறது இதிலிருந்து மீள இருக்கும் ஒரேவழி எண்ணெய் தண்ணீரை ஒழுங்காகப் பாவித்தலாகும். சனி நீராடல் என்ற ஔவை வாக்கும் இங்கு சிந்திக்கத்தக்கது சித்திரை நிலவுபோல் சித்திரைச் சிந்தனை எல்லா மக்கள் மனங்களிலும் படிந்து செயற்பட ஆண்டவன் அருள் புரியவேண்டும். சிரசின் பிரதானம் சித்திரைப் பிறப்பில் நன்கு உணரப்படவேண்டும்.

இவ்வருடப் பிறப்பு சாத்துவிக வேளையில் விபவ என்னும் பெயரோடு பிறக்கிறது. ரஜதம், தாமசம், சாத்துவிகம் என்னும் மூன்று குணங்களில் சாத்துவிகமே மனித வாழ்க்கைக்குத் தேவையானது. குணரீதியான செழுமையே சமுகாய நலனுக்குத் துணை செய்யக் கூடியது பேரின்ப வெள்ளத்துள் திளைக்கக் குணம் ஒவ்வொன்றும் சாத்துவிகமாகவேண்டும் என்பது நமது சமய விதி. இவ்விதி நமக்கு வசமாகவேண்டுமென்று புதிய வருஷத்தில் வேண்டுதல் செய்வோம் ●

- புலவர் ஈழத்துச் சிவானந்தன் -



மலரும் மகிழ்ச்சியும் மலர்ந்து பொலியும் சித்திரைப் புத்தாண்டை சிரித்து வரவேற்கும் வெள்ளை உள்ளம் கொண்ட சின்னஞ் சிறுவனைப் பாருங்கள்.

## வருக, வருக! விபவ வருக!!

'பிரபவ' ஆண்டாள் விடையது பெறவும்
வரவது நல்கும் 'விபவ' நீ வருக!
ஏக்கம் இன்னும் மாருப் போக்கில்
பூக்கும் ஆண்டே பொலிந்தே வருக
உயிரும் உடைமையும் உயர்வுறு கல்வியும்
பயிரும் தொழிலும் பலவகை இழந்தும்
உலகம் முழுதும் அகதிப் பெயரில்
அலையும் நிலைபோய் ஆறுதல் பெறவே
இதமாய் மக்கள் இன்பங் காணும்
விதமாய் இங்கே விடியல் தோன்ற
தலை நிமிர் நிலையில் தமிழர் திகழ
கலை எழில் கொஞ்சக் கானமும் பாடி
தொழிலுங் கமமும் திறமாய்ப் பெருகிப்
பொழிலாய் இந்தப் பொன்னகம் சிறக்க
நலமே நாடும் நினைவே எங்கும்
பலமாய் ஓங்கிப் பயனே சேர்க்க
வருக வருக "விபவ" வருக
தருக தருக சுபமே தருக;

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

## மலையாள மாநிலத்தில் புதுவருடக் கொண்டாட்டம்

தமிழ் புத்தாண்டுப் பிறப்பை கேரளத்தில் 'விஷு' பண்டிகையாக, விசேஷமான முறையில் கொண்டாடுகிறார்கள். அவர்களுக்கு ஆண்டு பிறப்பு ஆவணி மாதத்தில், அவர்கள் பின்பற்றுவது கொல்லம் ஆண்டைத்தான்.

பங்குனி முப்பத்து ஒன்றும் திகதி நள்ளிரவுக்குப் பின், சித்திரை ஆரம்பிக்கும் போது, 'விஷுக்கணி காணல்' என்ற அந்தப் புதுமையான பண்டிகை நடைபெறும். அரிய இயற்கைச் செல்வங்களைப் புனித நாளன்று நோக்கில் முதன் முதலாகக் காண்பதை ஒரு புண்ணியமாகக் கருதுகிறார்கள். அதாவது கண்ணைத் திறந்த உடன் ஆண்டவனை தரிசிக்க விரும்புவது போல, அவன் அளிக்கும் இயற்கைச் செல்வங்களின் முன் முதன் முதலாக விழித்து நல்லவைகளாகவே நடக்க வேண்டும் என்று எண்ணி, மனநிறைவு பெறுகிறார்கள்.

பங்குனி மாதம் முப்பத்து ஒன்றும் திகதி இரவு, வீட்டிலுள்ளவர்கள் உறங்கத் தொடங்கியதும் அந்த வீட்டின் மூத்தவர் அந்தக் கணிக் காட்சியை முறையாக அமைப்பார். வீட்டில் வழக்கமாக பூஜை நடக்கும் இடத்தில், அல்லது பொருத்தமான சுத்தமான ஒரு இடத்தில் மையமாக முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்து அதை நகைகள் மலர்களால் அலங்கரித்து, இரு பக்கமும் தங்கம் போல் தேய்த்துப் பளபளக்கும் குத்து விளக்குகளை வைத்து, திரியும் நெய்யும் இட்டு, முன்பக்கம் இடங்கழி குவிய நெல் வைத்து (சேர் போன்ற கேரளத்து அளவை) அதை யொத்துக் கிண்ணங்களில் நிரப்பப் பருப்பு முதலிய தானியங்களை வைத்து இவைகளைச் சுற்றி பெரிய புஷ்டியான வாழைப் பழக்குலை, தேங்காய், பலாப்பழம், பலக்காய்க்குலை, மாங்காய்க்குலை, கொத்துக் கொத்தாகக் கொன்றைப் பூ தென்னம்பூ, மஞ்சள் கொத்து பூசணிக்காய், வெள்ளரிக்காய் சேனை இன்னும் சிறந்தபொருள்களெல்லாம் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தெரியும் விதத்தில் சோலைபோல அலங்காரமாக வைப்பார்கள். அரைக்கச் சக்திக்கேற்ற பொருளைச் சேர்த்து வைப்பார்கள் ஒரு தட்டத்தில் சில்லறைப் பணம், தங்கப் பவுண் முழு வெள்ளி ரூபாய் நகைகளையும் இந்த தானியக் கிண்ணங்களுக்கு மேல் வைத்திருப்பார்கள்.

நள்ளிரவு கழிந்ததும் வீட்டின் முதியவர் நெருப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு இருட்டில் அந்த இடத்துக்குச் சென்று குத்து விளக்கை ஏற்றிவிட்டு நமஸ்கரித்துவிட்டு கண்ணாடியில் முகத்தைப் பார்த்துவிட்டு அங்குள்ள ஒவ்வொரு பொருளையும், அகலக் கண் விழித்து ஒவ்வொன்றாகப் பார்த்து தங்க வெள்ளிப் பொருள்களை கண்களில் ஒற்றி ...ஆம் பக்கம் பார்க்கக்




அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் எமது மனமார்ந்த

புதுவருட நல் வாழ்த்துக்கள்

சுந்தர்ஸன் மானிப்பாய்

● மின்சார பாவனைப் பொருட்கள்
● மின் உதிரிப் பாகங்கள்
● மின்சார மோட்டர்கள்
● S-Lon பைப் வகைகள், இணைப்புக்கள்
● மின்சார மோட்டர்கள்
● ரெண்டி சுவிச் வகைகள்

மற்றும் உங்கள் இல்லங்களுக்கு தேவையான சகலவிதமான மின் அலங்காரப் பொருட்கள், லிங்கா எலெக்ரிக்கல்ஸ் தயாரிப்புக்களான 4 அடி, 2 அடி ரியூப் லைட்டுக்கள், வட்ட ரியூப் பல்ப்புகள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நம்பகரமான உயர்ந்த சேவை செய்யும்

ஒரே ஸ்தாபனம்

SUNDHARSON

Market View Manipay.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்


அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக

நாம் செய்ய வேண்டியவை:

1. நல்லதையே செய்வோம்.
2. நல்லதையே நினைப்போம்.
3. சூழலைத் தூய்மை செய்வோம்.
4. குளங்களைத் தோண்டி ஆழமாக்குவோம்.
5. போதியளவு மழைநீரைத் தேக்குவோம்.
6. இயன்றளவு பல்வகை மரங்களை நடுவோம்.
7. பனை அபிவிருத்தியில் ஊக்கம் எடுப்போம்.
8. பனம் பண்டங்களை உபயோகிப்போம்.
9. உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்.
10. வயல்களில் மாற்றுப் பயிர்களை உண்டாக்குவோம்.
11. நல்ல தமிழ் பேசவும் எழுதவும் பயில்வோம்.
12. பெரியவர்களை வணங்கி நல்லாசி பெறுவோம்.
13. எல்லோரும் தினமும் யோகாசனம் செய்வோம்.
14. கடமையை எல்லோரும் சரிவரச் செய்வோம்.
15. எல்லோரும் வீட்டுத் தோட்டம் செய்வோம்.
16. திருக்குறளையும், நீதி நூல்களையும் படிப்போம்.

மில்க்வைற்
MWS MILKWHITE

நாளும் நற்பணி செய்ய உங்கள் ஆதரவை நாடும்
''மில்க்வைற்''

---

வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள்
நண்பர்கள் அன்பர்கள்
அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த

புதுவருட வாழ்த்துக்கள்

'நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை'
இவற்றை அறிப்பவள்தான் சீமாட்டி
✱ கல்யாண கூறை ஜவுளிகளுக்கு
நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

## சீமாட்டி

122 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்
ஸ்தாபனம் திறந்திருக்கும்.)

---

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

★ திருமண பட்டுப புடைவைகள்
★ இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள்
★ மில் ஜவுளிகள் இவற்றின்
நம்பிகை நட்சத்திரம்தான்

## சிந்து பைரவி
## SINTHU BHIRAVI

No 48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்
ஸ்தாபனம் திறந்திருக்கும்.)

---

வாடிக்கையாளர்கள்! நண்பர்கள்!!
ஆதரவாளர்கள் அனைவருக்கும்

## எமது புத்தாண்டு
## ★ வாழ்த்துக்கள ★

ஜவ்னு எலக்றிக்கல்ஸ்
(மின்சார ஒப்பந்தகாரரும் மின்சார விநியோகஸ்தர்களும்)
96 (6) ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

---

ஆதரவாளர்கள்! அன்பர்கள!!
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட

## நல்வாழ்த்துக்கள்

- மின்சார உபகரணங்கள்
- S lon பைப்புக்கள்
- சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- மோட்டார் FAN முதலியவற்றை

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சிவா எலெக்றிக்கல் ஸ்ரோஸ்
635 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

புது வருடத்தை முன்னிட்டு
புதுமணத் தம்பதிகளுக்கு
ஹோட்டல் ஞானம்ஸ்
வழங்கும்
விசேட சலுகைகள்

குறைந்த கட்டணத்தில்:-

✱ அனைத்து வசதிகளும் கொண்ட குளிரூட்டப்பட்ட படுக்கை அறைகள்.

✱ நவீன வசதிகள் கொண்ட வரவேற்பு மண்டபம்.

✱ மேல் நாட்டு கீழ் நாட்டு உணவு வகைகள்.

✱ மேல் நாட்டு மதுபான வகைகள்.

அன்பான உபசரிப்புடன்
உன்னதமான சேவை
அத்துடன் திருமண புகைப்படங்கள் ஞானம்ஸ் ஸ்ருடியோவில் எடுப்பதற்கான விசேட ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
அனைத்திற்கும்

## ஹோட்டல் ஞானம்ஸ்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

---

எமது அன்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
புதுவருட வாழ்த்துக்கள்

தரமான பொருள் !
அளவான நிறை !!
மலிவான விலை !!!

சுன்னாகத்தில் பலசரக்கு வியாபார முன்னோடிகள்

| இராஜேஸ்வரி ஸ்ரோஸ் | பிறேமா பான்சி பலஸ் |
|---|---|
| இல. 16, புகையிரத வீதி, சுன்னாகம். | புகையிரத வீதி, சுன்னாகம் |

---

அன்பர்கள் நண்பர்கள்
ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த
புதுவருட வாழ்த்துககள்

சீதுவ மாஸ் (Mash) பிறிமா (Mash) தவிடு, பிண்ணாக்கு போன்ற சகல கால்நடை உணவு வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள வேண்டிய சிறந்த இடம்.

## எஸ். ரி. எம். றேட்ஸ்


760 / A கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும எமது புதுவருட வாழ்த்துக்கள்

## நியூ விமாகி

★ செரமிக்



★ எலக்றிக்கல்ஸ்

★ உள்நாட்டு வெளிநாட்டு செரமிக்
உற்பத்திப்பொருட்களும்
★ எஸ்லோன் பைப்புகளும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

✱ உஷா பிறிட்ஜ் வகைகள்
✱ உஷா பான்கள்
✱ கே டி. கே. பான்கள்
மின்சாரப் பொருட்களும்
உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்
★ பிளைவுட்கதவுகள் ★ மோட்டார் வகைகள்
★ மாபிள் ரயில்ஸ் வகைகளுக்கு
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

நியூ விமாகி 27/3 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள் ! நண்பர்கள் !!
ஆதரவாளர்கள் !! வாடிக்கையாளர்கள் !!
அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான

## புத்தாண்டு நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கிறோம்

★ தங்கநகைகளை கூடிய விலையில்
விற்க நீங்கள் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

## நியூ ஈழம் ஜுவல்லரி மாட்

(குளிரூட்டப்பட்டது)
இல. (423, 247) கே. கே எஸ் வீதி, சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(சண்முகம் தேனீர்ச்சாலைக்கு அருகாமையில்)

உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## முழுமுதற் பொருளின் அருளொளி பாய்வதாக!

'பிர' என்ற அடி பல பொருள் அமைந்து விளங்கும் தனிமை, புதுமை என வரும். எனவே பிரபவ வருடத்தில் தனிமையானதும் புதுமையானதுமான தாங்க முடியாத இன்னல்களையும், கஷ்டங்களையும் அநுபவித்தோம்.

இனி ஜனனமாகும் 'விபவ' வருடம் எதிர் மாறாக எல்லா நலன்களையும் இன்ப வாழ்வுக்கு அளிக்கும் என்பது தேறம். துன்பம் அநுபவிப்பது நல்லதா அல்லது இன்பம் நுகர்வது நல்லதாவெனின் ஒவ்வோர் இன்பமும் இறுதியிச் துன்பமாகப் பரிணமிப்பது திண்ணம். அற்பர்களாகிய நாம் இறைவனின் திருவிளையாடல்களை ஓர்ந்து கொள்வது இயலாத காரியம்.

ஈச்வரன் செயலை எண்ணிப் பார்க்குமிடத்து அண்டம் முழுவதும் நீக்கமற நிறைந்திருந்து அனைத்தையும் இயக்குகிறான். எல்லாம் ஈசன் செயல்; எல்லாம் அவன் உடைமை. நான் அவனது தொண்டன் என்கிற எண்ணம் வரும் பொழுது மன கொதிப்புப் போய் விடுகிறது அருளெலாம் ஒன்று திரண்டதோர் உருவாய அன்பலை மோதும் அருட் பெருங்கடலாய், அமுதம் பொழியும் அகண்டமா வெளியாய், அந்தமில் இன்பம் சுரளிடுகின்ற அருட்பெருஞ் ஜோதி, தனிப்பெருங்கருணையின் வடிவாய் அனைத்திற்கும் மூலமும் முடிவுமாய், முழு முதலான பூரணப் பொருள், வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் அருளொளியைப் பாய்ச்சி மறுமலர்ச்சியுறச் செய்து இம் மண்ணுலக வாழ்வை இறைமயமாக ஆக்கி விண்ணின்பத்தைத் துய்க்க வேண்டும். அமரர்களுக்கும் கிட்டுதற்கரிதான ஆத்மானந்தத்தை இம் மண்ணுலகில் அநுபவிக்க எமக்கருள வேண்டும்.

இதுவே வாழ்வின் குறிக்கோளும் மானவ ஜீவனின் ஆதரிசமுமாகும் மேலே கூறியவையே நாம் அன்பர்களுக்கும் அளிக்கும் உளமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
– வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர்
– குறைவிலை.

-ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர
பரமாசாரிய ஸ்வாமிகள்
[நல்லை ஆதீனம்]

# சித்திரையில் மருதடியான் சித்திரத்தேர் ஏறுகிறான்

**எஸ். கே. யோகநாதன்**

பிரணவத்தைத் தனது வடிவமாகக் கொண்ட விநாயகப் பெருமானை சிவபெருமானின் மூத்த திருக்குமாரர் என்று நமது பழம் பெரும் புராணங்கள் பகருகின்றன. தம்மை நினையாதவர்க்கு விக்கினங்களை ஏற்படுத்துவதாலும் தம்மை அன்புடன் வழிபடுபவர்களுக்கு விக்கினங்களை நீக்கி அருள் பாலிப்பதினாலும் இவருக்கு விக்கினேசுவரர் விக்கினராசர் என்ற காரணப் பெயர்களும் உண்டு.

சிவனும் விநாயகரும் ஒருவரே என நம்பும் சைவப் பெருமக்கள் எக் கருமத்தைத் தொடங்கு முன்பு விநாயகரை வணங்கி, எம்பெருமானின் அருள் பெற்றுய்வதை வழக்கத்தில் கொள்ளுகின்றார்கள். சைவசித்தாந்த சாத்திரங்களில் விநாயகப்பெருமானின் பெருமைகள் நன்கு புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. சைவ சித்தாந்த சாத்திரங்களில் விநாயகப் பெருமானை எக்கருமம் தொடங்கு முன்னரும் அக்கருமம் இடையூறுது தடையின்றி வெற்றி பெற வணங்கல் வேண்டும் என்பது மிகவும் ஆணித்தரமாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது ஆன்மாக்கள் அருள் பெற்றுய்யும் பொருட்டு பரமபதியாகிய சிவன் எடுத்த மூர்த்தங்களில் ஒரு மூர்த்தமான மூஷிக வாகனனை வணங்குவது சிவனைப் பணிவதற்கு ஒப்பானது.

தன்னை மெய்யன்போடு வணங்குபவர்களின் துன்பங்களை நீக்கும் விநாயகப் பெருமான் ஆன்மாக்களின் அஞ்ஞானத்தை நீக்கி ஆன்மாக்களின் அறிவிற்கு அறிவாக விளங்குகின்றார். பருதிக வயிறும், தேவ சரீரமும், யானை முகமும், ஒற்றைக் கொம்பும், மூன்று திருக்கண்களும், இரு செவிகளும் துதிக்கையுடன் ஐந்து திருக்கரங்களும், இரண்டு திருவடிகளும் விநாயகப் பெருமானின் அங்கலட்சணங்களாகும்.

இவ்வகையான லட்சணங்களுடன் மெய்யடியார்களுக்கு அருள்செய்யும் உயர் தெய்வம், கணங்களுக்கே நாதனாய் விளங்கிக் கணநாதன் என்றுபெயர் பெற்ற விநாயகக் கடவுளாவர். இவர் மருதடியில் குடிகொண்டு அடியார்களுக்கு அருள்புரியும் பழைமையும், பெருமையும், புதுமையும், வாய்ந்த திருத்தலம் மானிப்பாய் மருதடி ஆலயம். இவ்வாலயத்தின் பிரதான வீதியை நோக்கியிருக்கும் ஆலய வாசலில் மிகப் பழைமையான மருதமரம் ஒன்று காணப்படுகின்றது.

மருத மரத்தில் மரத்தின் அடிப்பகுதியில் சிறப்பாக இயற்கையாக அமைந்து இருக்கும் பொந்திற்குள் விநாயகரின் திருவுருவச்சிலை அமைந்துள்ளது இம் மருதமரத்தைச் சுற்றி அடியார்கள் இன்றும் வலம் வந்து அமர்ந்து விநாயகரின் திருப்பாடல்களைப் பாடி வழிபடுது பார்ப்போர் நெஞ்சங்களையும் நெகிழ வைக்கும் இதனாலன்றோ மருதடியானை மருதமர நிழலிலே எழுந்தருளி மனக்கவலை மாற்றும் விநாயகர் எனவும் அழைப்பர்.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் திருவுருவம் வடக்கில் நாடடுக்கோட்டை என்னும் ஊரிலிருந்து அவ்வூர் செட்டியார்கள் மூலமாய் வரவழைக்கப்பட்டு இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என வரலாறு கூறுகிறது. இதுமட்டுமல்லாமல் சிதம்பரம் என்னும் சிவஸ்தலத்தைப் போல மருதடி விநாயகர் ஆலயமும் யோக நிஷ்டை கைவந்த சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு பூசித்து வந்த புண்ணிய ஸ்தலம் எனவும் வரலாறுகள் மூலம் அறிகின்றோம்.

இத்தகைய பெருமை வாய்ந்த இத்தலத்தில் இன்று இரதத்தில் வீதியுலா வருகின்றார் எம்பெருமான் கடந்த பிரபவ புத்தாண்டில் முதல் தடவையாக பஞ்சமுக விநாயகர் இரதத்தில் வருகை தந்தார் இம்முறை விபவ ஆண்டில் இரண்டாவது தடவையாக அழகொழுகவரும் அற்புதக் காட்சி நிகழுகின்றது பஞ்சமுக விநாயகர் தனது ஈசானம் தற்புருஷம், அகோரம், வாமதேவம் சத்தியோசாதம் ஆகிய ஐந்து திருமுகங்களினாலும் இரதத்தில் அருள் பொழிகின்றார் நாளை தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவுறும் விநாயகர் வணக்கத்தில் தேங்காய் உடைத்தல் மிக முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும்.



வினை தீர்க்கும் விநாயகப் பெருமானை மனதில் பிரார்த்தித்து அவர் கோவிலுக்குச் சென்று யான், எனது, என்னும் மமதைகள், அகந்தைகள் யாவும் அறவே நீங்கும்படியாக முப்முறை தாழ்ந்து முறைப்படி வணக்கஞ் செலுத்தி சிதறு தேங்காய் உடைத்தலால் பெருமைகள் பெற வேண்டிச் செய்யும் கருமங்கள் எவ்வித விக்கினங்களும் இன்றி இனிது முடிவுறும்.

விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குதலால் சகல சித்திகளையும் நாம் பெறலாம் என்பது திண்ணம், விநாயகப் பெருமானின் பேரருள் எங்கும் நிறைந்து பொலிவுற்று எம் அனைவரின் துன்பம் நீங்கி இடர் களைந்து இன்பம் பெருக எல்லாம் வல்ல பஞ்சமுக விநாயகப் பெருமானின் திருவடிகளை மெய்யன்போடு வழிபடுவோமாக.

## மலர்ந்தது சித்திரை!

போர்க்களத்தே படைப் பெருக்கினாலும் அழிவைக்காணும் வலியாலும், போர்க்கொடுமையாலும் மனப்புழுக்கம் பெறுதல் போலச் சூரியன் வெம்மையை வீசும் கோடைக் காலத்து நீர் நிலைகளெல்லாம் தன்வளம் சுருங்கி நடப்போர் அடிகளெல்லாம் வெம்மையாற் கொப்பளிக்க, உடற் புழுக்கம் ஏற்படுதலின் முதல் மாதத்துக்கு செற்றரை எனப் பெயர் ஏற்பட்டது. அதுவே சித்திரை என்பர் ஆய்வாளர்.

வானியற் கணக்காளர் சூரியனையும் சந்திரனையும் மையமாகக் கொண்டு மாதங்களை வகுத்தனர் சூரியனையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கும் நெறிக்கு 'சவுரமானம்' என்று பெயர். மேடம் முதல மீனம் வரை உள்ள பன்னிரண்டு வீடுகளிலும் சூரியன் அமர்ந்திருப்பதை ஒவ்வொரு மாசமாகக் கணிப்பர். இதுவே மேட ஞாயிறு சிங்க ஞாயிறு என வழங்கப்பட்டது. இதை மலையாளத்திற் காணலாம்.

சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிக்கும் வழக்கம் 'சாந்திரமானம்' எனப்படும். சாந்திரமானத்தில் இரு வகைக் கணிப்பு உண்டு. ஒன்று பூரணையையும், மற்றது அமாவாசையையும் இறுதி நாளாகக் கணிக்கப்படும் முதல் நெறி 'பூர்ணிமாந்த' முறை என்றும், பின்னது 'அமாந்த முறை' என்றும் பேர் பெறக் காணலாம்.

பண்டைய தமிழர் சாந்திரமான நெறியில் பூர்ணிமாந்த முறையையே கடைப்பிடித்து மாதங்களை வகுத்தனர் அத்துறைக் கணிப்பின்படி பூரணை நாள் நட்சத்திரத்துடன் கூடி நின்றதோ அந்த நட்சத்திரத்தின் பெயரையே குறிப்பிட்ட மாதத்தின் பெயராக அழைத்தனர். எனவே சித்திரைத் திங்களென்றால் சித்திரை நட்சத்திரத்திலே பூர்ண சந்திரன் கூடியிருப்பது என்பதே பொருள்.

சித்திரைக்குச் சித்திரையும் சித்திரா பூரணையும் ஆண்டின் முதல் மாதத்தல் இடம் பெறுவதைக் காணலாம். எனவே மேட ஞாயிறே சித்திரையாக மலர்ந்த உண்மையை நாம் அறிந்திருத்தல் அவசியம். அதாவது சித்திரை நட்சத்திரத்தில் முழுமதி கூடியதுவரையுள்ள காலப்பகுதி சித்திரைத் திங்கள் எனப்படும்.


★ அன்பர்கள்!
★ ஆதரவாளர்கள்!!
★ வாடிக்கையாளர்கள் !!!



★ அனைவருக்கும் ★
★ எமது ★
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
★

சுத்தமான இனிய ஐஸ்கிறீம் வகைகள்.
சுவை மிகுந்த சிற்றுண்டி வகைகள்
புரியாணி இவற்றிற்கு
விஜயம் செய்யுங்கள்:

**றிக்கோ**
**சுவீற்ஸ் கிறீம் ஹவுஸ்**
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



# புத்தாண்டு வாழ்த்துக்கள்

# கோல்டன் செரமிக்ஸ்

நாம் பிளவூட் கதவுகளின் ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப் பட்டுள்ளோம். உங்களுக்குத் தேவையான சகல அளவுகளிலும் எம்மிடம் கையிருப்பிலுள்ளன.

★ இத்துடன் குளியலறை அமைப்பிற்கு

- சகல விதமான கொமட் செட்டுகள்
- வோஷ் பேசின்கள்
- ஸ்கொடீன் பான் வகைகளும்
- மாபிள் கல்லு வகைகளும்
- எஸ்-லோன் பைப்புகளும் அதற்கான இணைப்புகளும்
- ஆர்பிக்கோ கோஸ் பைப்புகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்



**கோல்டன் செரமிக்ஸ்**
இல. 2 C. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
நண்பர்கள், அனைவருக்கும்

புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

- கறுப்பு வெள்ளை படங்களுக்கும்
- வெளிப்புற கலர் படங்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ருடியோ தனம்ஸ்**
609, கே. கே. எஸ். வீதி,
— யாழ்ப்பாணம் —



எமக்கு எல்லாவகையிலும் உதவிய வாடிக்கையாளர்கள்
நண்பர்கள், நல் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இப் பொன்னான நன்னாளில் எமது நன்றிகலந்த
புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- தற்காலத்திற்கேற்ப அழகிய கலைநயம் மிக்க 22 KT, 21 KT தங்க நகைகளை ஆடர்செய்து பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.
